பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

10 11 2026 12 40

திங்கட்கிழமை நண்பகல்

ஆகாஷ்வாணி

(Tune)

தலைப்புச் செய்திகள்

1. நாடு முழுவதும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா கூறியுள்ளார்.

2. கோவர்தன் பூஜை இன்று கொண்டாடப்படுவதையொட்டி, மக்களுக்கு குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

3. இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டுவரும் நீர் மேலாண்மை நடவடிக்கைகள், வளரும் நாடுகளுக்கு முன்மாதிரியாக திகழ்கிறது என்று உலகவங்கி கூறியுள்ளது.

4. ஈரானுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளுக்கு வளைகுடா நாடுகள் ஆதரவளிப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

5. *Kumamota Masters* பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Treesa Jolly - Gayatri Gopichand* இணை காலிறுதிக்கு முந்தையச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><><><><>

நாடு முழுவதும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா கூறியுள்ளார்.

உலக நோய்த்தடுப்பு தினம் இன்று டைப்பிடிக்கப்படுவதையொட்டி, சமூகவலைளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

சரியான நேரத்தில் முழுமையான நோய்த்தடுப்பு நடவடிக்கை மூலம் குழந்தைகளையும், கர்ப்பிணி பெண்களையும் பாதுகாப்பதில் அரசு உறுதியுடன் உள்ளதாக அவர் கூறினார்.

போலியோ மற்றும் டெட்டனஸ் நோய்களை முற்றிலும் ஒழிப்பதில் இந்தியா படைத்துள்ள சாதனையை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யு-வின் டிஜிட்டல் தளம், இந்திர தனுஷ் இயக்கம் போன்ற முன் முயற்சிகள் தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளதாக திரு. ஜே.பி. நட்டா கூறியுள்ளார்.

<><><><><><><><>

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கோவர்தன் பூஜை இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர் ஆகியோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இந்த திருநாளில் அனைவரும்

மகிழ்ச்சி, அமைதி, வளமுடன் வாழ்வதற்கு பகவான் கிருஷ்ணனின் ஆசி கிடைக்கட்டும் என்று கூறியுள்ளார்.

பக்தி, நன்றியுணர்வு, சகோதரத்துவம் போன்ற பண்புகளுக்கு வலுசேர்க்கும் வகையில் இந்த திருநாள் அமைந்துள்ளதாக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், அனைவரது வாழ்விலும் புதிய ஆற்றலையும், உற்சாகத்தையும் இந்த விழா வழங்கட்டும் என்று பிரார்த்திப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அனைவரும் மகிழ்ச்சி, வளம் மற்றும் நல்வாய்ப்புகளுடன் வாழ்வில் முன்னேற வாழ்த்துவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

<><><><><><><><>

இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் நீர் மேலாண்மை நடவடிக்கைகள், வளரும் நாடுகளுக்கு முன்மாதிரியாக திகழ்கிறது என்று உலகவங்கி தெரிவித்துள்ளது.

நடப்பாண்டுக்கான ஐ.நா. நீர் மேலாண்மை மாநாட்டுக்கு முன்னதாக நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய உலக வங்கியின் நீர் விவகாரங்களுக்கான இயக்குநர் திரு. சரோஜ்குமார் ஜா, இதனை தெரிவித்துள்ளார்.

நீர் மேலாண்மைக்காக ஜல் ஜீவன் இயக்கம், நமாமி கங்கை மற்றும் தூய்மை இந்தியா இயக்கம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீர் மேலாண்மை நடவடிக்கைகள் மூலம் கடந்த ஏழு ஆண்டுகளில் 80 கோடி மக்களுக்கு தூய்மையான குடிநீர் வசதி கிடைத்துள்ளதாக அவர் கூறினார்.

கங்கை நதியை தூய்மைப்படுத்தும் திட்டம், அணைகள் பாதுகாப்பு திட்டம் போன்ற நடவடிக்கைகளுக்கு திரு. சரோஜ்குமார் ஜா பாராட்டு தெரிவித்தார்.

<><><><><><><><>

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச்செயல்களை ஒருபோதும் சகித்துக்கொள்ள முடியாது என்று மேற்குவங்க முதலமைச்சர் திரு. சுவேந்து அதிகாரி தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது உடனடியாக கடும் நடவடிக்கை எடுக்க ஏதுவாக காவல்துறையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

Uttar Dinajpur மாவட்டத்தில் Raiganj அருகே பன்னிரெண்டு வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபரை காவல்துறையினர் கைது செய்ய முயற்சி மேற்கொண்ட போது நடந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் அந்த நபர் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் குறித்து பேசிய அவர், குற்றவாளிகளை பிடிக்கும் முயற்சியின் போது தற்காப்புக்காக காவல்துறையினர் பதில் தாக்குதல் நடத்தியதாக தெரிவித்தார்.

பெண்களுக்கு எதிராக குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது எவ்வித பாரபட்சமின்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு. சுவேந்து அதிகாரி கூறினார்.

<><><><><><><><>

இஸ்லாமியர்கள் அடுத்த ஆண்டுக்கான ஹஜ் புனித யாத்திரை மேற்கொள்ள ஏதுவாக, இந்தியா - சவூதி அரேபியா இடையே ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகியுள்ளது.

மத்திய சிறுபான்மையின நலத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ, அரசு முறை பயணமாக சவூதி அரேபியா சென்றிருந்த போது, ஜெட்டாவில் அந்நாட்டு அமைச்சர் திரு. *Tawfiq Bin Fawzan Al Rabiah*-வுடன் நடத்திய பேச்சுவார்த்தைக்கு பின்னர், இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்தியாவிலிருந்து ஒரு லட்சத்து 75 ஆயிரத்து 25 யாத்ரீகர்கள் ஹஜ் புனித பயணம் மேற்கொள்ள இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.

இந்த புனித யாத்திரையை மேற்கொள்ளும் இஸ்லாமியர்களுக்கு போக்குவரத்து, பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு வசதிகளை மேம்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<><><><><><><><>

குஜராத் புத்தாண்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இத்தினத்தையொட்டி குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இந்த புத்தாண்டு தினம் புதிய

நம்பிக்கையையும், புதிய தொடக்கத்தையும் வழங்கட்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

சமூகவலைதளத்தில் பிரதமர் திரு. நரேந்திரமோடி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இந்த புத்தாண்டு தினம் அனைவரது வாழ்விலும் மகிழ்ச்சி, அமைதி, வளம், நலவாழ்வு ஆகியவற்றுக்கான புதிய நம்பிக்கையுடன் தொடங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

உடல் ஆரோக்கியம், உற்சாகம் மற்றும் தன்னம்பிக்கையை இந்த புத்தாண்டு தினம் வழங்கட்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்வதாக பிரதமர் கூறியுள்ளார்.

<><><><><><><><>

போதைப்பொருள் தடுப்புப் நடவடிக்கைகளை வலுப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து, இந்தியா - அமெரிக்க நாடுகள் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக போதைப் பொருள் கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சட்டவிரோதமான போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான நடவடிக்கைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவது என முடிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பான தகவல்களை பரஸ்பரம் பகிர்ந்து கொள்வது உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

<><><><><><><><>

ஈரானுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளுக்கு கத்தார், சவூதி அரேபியா, குவைத் உள்ளிட்ட வளைகுடா நாடுகள் ஆதரவளிப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தொவித்துள்ளார்.

இதுகுறித்து, சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஈரானுக்கு எதிராக, ஆபரேஷன் அயர்ன்கேட் என்ற பெயரில், ராணுவம் மற்றும் கடற்படை ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கான முயற்சிகளை கருத்தில்கொண்டு, அந்நாட்டின் மீதான ராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவது சாத்தியமற்றது என்று திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

<><><><><><><><>

எந்தவொரு ஐரோப்பிய நாட்டின் மீது தாக்குதல் நடத்த திட்டம் எதுவுமில்லை என்று, ரஷ்ய துணை வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. *Sergei Ryavkov* தெரிவித்துள்ளார்.

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற ஐரோப்பிய பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு அமைப்பின் வட்டமேசை மாநாட்டில் உரையாற்றிய அவர் இதனை தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளில் ராணுவ நடவடிக்கைகள் ரஷ்யா மேற்கொள்ள உள்ளதாக தவறான செய்திகள் பரப்பப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

ரஷ்யா - யுக்ரைன் இடையேயான மோதலை முடிவுக்கு கொண்டு வருவதில் ஐரோப்பிய நாடுகள் முயற்சியை மேற்கொள்ளவில்லை என்று அவர் குற்றம்சாட்டினார்.

சமத்துவம், பரஸ்பரநலன் மற்றும் பாதுகாப்பு அடிப்படையில் ரஷ்யாவுடன் ஐரோப்பிய நாடுகள் மீண்டும் பேச்சுவார்த்தையை தொடங்கும் என்று தாம் எதிர்பார்ப்பதாக திரு. *Sergei Ryavkov* நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<><><><><><><><>

நடப்பாண்டின் சிறந்த இலக்கியத்திற்கான புக்கர் விருது பிரிட்டனை சேர்ந்த *81* வயதான எழுத்தாளர் திரு. ஜான் ஹாரிசனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

லண்டனில் நடைபெற்ற விழாவில் அவர் எழுதிய *The End of Everything* என்ற புதினத்திற்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

60 ஆண்டுகாலமாக எழுத்துப்பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள அவருக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டதன் மூலம், இந்த மதிப்புமிக்க இலக்கியப் பரிசு வென்ற வயதான எழுத்தாளர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

<><><><><><><><>

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் மற்றும் அந்தமான் நிக்கோபர் தீவுகளில் ஓரிரு இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆந்திரப்பிரதேசம், கேரளா, மாஹே, லட்சத்தீவு ஆகிய இடங்களில் ஓரிரு பகுதிகளில் இடியுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

<><><><><><><><>

Kumamota Masters பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Treesa Jolly - Gayatri Gopichand இணை காலிறுதிக்கு முந்தையச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஜப்பானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் இந்த இணை 21-17, 21-14 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Suzuki - Yamakita இணையை வென்றது.

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையே ஹாமில்டனில் இன்று நடைபெறுவதாக இருந்த மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி மழை காரணமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரில் இந்தியா 2 - 0 என்ற போட்டி கணக்கில் இந்தியா முன்னிலை வகிக்கிறது.

<><><><><><><>

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக்கோப்பை கிரிக்கெட் போட்டியில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில், முதலில் பேட் செய்துவரும் இந்தியா சற்றுமுன்வரை 32 ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 153 ரன் எடுத்துள்ளது.

Al Amerat-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.

THE <><><><> END